## பதிவுத்துறை

1. சார்பதிவாளர் அலுவலகம் பெயர்:

    முகவரி:

2. முந்தைய அலுவலகம் :

3. http://tnreginet.gov.in என்ற இணையதளத்தில் உள்நுழைந்து மென்பொருள் வழி தாங்களே மிகவும் எளிமையான முறையில் ஆவணங்களை உருவாக்கிக்கொள்ளலாம். உரிய கட்டணத்தை இணைய வழி செலுத்தி ஆவணப் பதிவிற்கு முன்பதிவு செய்து கொள்ளலாம். முன்பதிவு செய்த நாள் மற்றும் நேரத்தில் ஆவணத்தை பதிவுக்கு தாக்கல் செய்யவேண்டும்.

**4. ஆவணங்களுடன் தாக்கல் செய்யப்படவேண்டியவை :**

i. ஆவணத்தில் கையொப்பமிட்ட அனைவருக்கும் சாட்சிகள் உட்பட, நிழற்படம் பதித்த அடையாள அட்டை.

ii. நத்தம் சர்வே எண் எனில் பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஏ படிவம்

iii. மனை எனில் மனைப்பிரிவின் வரைபடம், முதல் பதிவாக இருப்பின் அங்கீகரிக்கப்பட்ட / வரன்முறைப்படுத்தப்பட்ட ஆணை.

iv. 10 லட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்புடைய விற்பனை ஆவணங்களுக்கு வருமானவரி அடையாள அட்டை(PAN) அல்லது படிவம் 60.

v. அசல் முன்பதிவு ஆவணம், காணாமல் போயிருப்பின் 'கண்டுபிடிக்க முடியவில்லை' என்ற காவல்துறை சான்று மற்றும் நாளிதழ் விளம்பரம்

vi. சொத்தின் உரிமையாளர் இறந்திருப்பின் இறப்புச் சான்று மற்றும் வாரிசு சான்று

**5. ஆவணங்கள் தயாரிப்பு:**

ஆவணங்கள், உரிமம் பெற்றவர் அல்லது பதிவு பெற்ற வழக்கறிஞரால் பிழைகளின்றி தயாரிக்கப்படவேண்டும். ஆவணத்தை எழுதிக்கொடுப்பவரும் பதிவுத்துறை வலைப்பரப்பை பயன்படுத்தி ஆவணத்தைத் தாமே தயாரிக்கலாம்.

6. ஆவணங்கள், பதிவு செய்யப்பட்ட நாளன்றே உரிய நபரிடம் திரும்ப வழங்கப்படும். அங்கீகரிக்கப்படாத கட்டடங்கள், கிராமத்தை பொறுத்து 10 சென்ட்-க்கும் நகரத்தை பொறுத்து 20 சென்ட்-க்கும் குறைவான விவசாய நிலங்கள், வழிகாட்டி மதிப்பிற்கும் குறைவான ஆவணங்கள் ஆய்வுகள் மேற்கொண்டு திரும்ப வழங்கப்படும்.

7. ஆவணங்கள் நீதிசாரா / மின்னணு முத்திரைத்தாள்களிலோ அல்லது வெற்றுத்தாளிலோ எழுதப்படலாம். குறைவாக உள்ள முத்திரைத்தீர்வையை இணையவழி செலுத்தலாம். ரூ 1000 க்கும் குறைவான தொகையை அலுவலத்தில் கடன் / பற்று அட்டையை கொண்டு POS வழி செலுத்தலாம்.

ஆவணங்களைத் தாக்கல் செய்பவர்கள் தாங்களே நேரில் பதிவு அலுவலரிடம் தாக்கல் செய்து பதிவு செய்து கொள்ளலாம். இடைத்தரகர்களை அணுகாதிருக்க கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**8. முத்திரைக்கட்டணம் மற்றும் பதிவுக்கட்டண விவரம்:**

| ஆவண வகைப்பாடு | முத்திரைத்தீர்வை | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. விற்பனை, தானம் | 7% சந்தை மதிப்பிற்கு | 4% சந்தை மதிப்பிற்கு |
| 2. பரிவர்த்தனை | அதிக மதிப்புடைய சொத்துக்கு 7% | அதிக மதிப்புடைய சொத்துக்கு 4% |
| 3. ஈடு /அடமானம் (சுவாதீனம் இல்லாமல்) | 1% (கடன் தொகைக்கு) உயர்ந்தபட்சம் Rs40,000/- | 1% (கடன் தொகைக்கு) உயர்ந்தபட்சம் Rs10,000/- |
| 4. சுவாதீனமில்லாத mவிக்கிரைய உடன்படிக்கை | Rs.20 | 1% (முன்பணத்திற்கு) |
| 5.கட்டிட ஒப்பந்த உடன்படிக்கை | 1% | 1% |
| 6 ரத்து ஆவணம் | Rs.50 | Rs.50 |
| 7. பாகப்பிரிவினை ஆவணம் | | |
| i) குடும்ப நபருகளுக்கிடையில் | ஒவ்வொரு பாகத்திற்கும் 1% (அதிகபட்சம் ரூ.25,000/-) | ஒவ்வொரு பாகத்திற்கும் 1% (அதிகபட்சம் ரூ.4,000/-) |
| ii) குடும்ப நபர் அல்லாதவர் களுக்கிடையில் | பிரிந்த பாகத்திற்கு 4% | பிரிந்த பாகத்திற்கு 1% |
| 10. பொது அதிகார ஆவணம். | | |
| i) பொது அதிகாரம் (குடும்ப நபர் அல்லாதவருக்கு) | Rs. 100 | Rs.10,000 |
| ii) பொது அதிகாரம் (குடும்ப நபருக்கு) | Rs. 100 | Rs.1,000 |
| 11. தான செட்டில்மெண்ட் | | |
| i)குடும்ப நபருக்கு | 1% (அதிகபட்சம் ரூ.25,000/-) | 1% (அதிகபட்சம் ரூ.4,000/-) |
| ii) குடும்ப நபர் அல்லாதவருக்கு | 7% | 4% |
| 13. உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு | 0.5% அதிகபட்சம் ரூ.30,000/- | 1% அதிகபட்சம் ரூ.6,000/- |
| 14. விடுதலை | | |
| i) குடும்ப நபர்களுக் கிடையில் | 1% (அதிகபட்சம் ரூ.25,000/-) | 1% (அதிகபட்சம் ரூ.4,000/-) |
| ii) குடும்ப நபர் அல்லாவர்களுக் கிடையில் | 7% | 1% |

**9. இந்து திருமணச் சட்டம் 1955 – பதிவு விவரங்கள்:**

**தகுதிகள்**

இந்து / புத்த / சமண / சீக்கிய மதத்தைச்சார்ந்த விலக்களிக்கப்பட்ட உறவினர் (Prohibited Relationship) அல்லாத 21 வயது, 18 வயது முறையே முடிந்த ஆணும், பெண்ணும் மத வழக்கப்படி / சுயமரியாதை முறையிலோ நிகழ்த்திகொண்ட திருமணங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

**எல்லை**

கணவன் / மனைவியின் நிரந்தர இருப்பிடம் / திருமணம் நிகழ்ந்த இடம் இவைகளில் அமைந்துள்ள ஏதேனும் ஒரு திருமணப்பதிவாளரிடம் பதிவு செய்து சான்று பெற்றுக்கொள்ளலாம்.

**மனுவுடன் இணைக்கவேண்டிய சான்றுகள் :–**

பதிவுத்துறை இணையதளத்தில் விவரங்களை பூர்த்தி செய்து உருவாகும் மனுவினை அச்சுப்பிரதி எடுத்துக்கொள்ளவேண்டும். பதிவிற்கான நாள் நேரம் முன்பதிவு செய்துகொள்ளலாம். கணவன் மற்றும் மனைவி ஆகியோரின் இருப்பிடச் சான்று, வயது குறித்த சான்று, சாதிச்சான்று (சாதி குறிப்பிட்டால் மட்டும்) திருமணம் நடை பெற்றதற்கு ஆதாரமான சான்று, மூன்று சாட்சிகளின் அடையாள அட்டை.

**கட்டணங்கள்**

திருமணப்பதிவுக் கட்டணம் ........ ரூ. 100.00
நகல் வழங்க 1 நகலுக்கு ........ ரூ. 10.00

**10. தனி திருமணச் சட்டம் 1956 – பதிவு விவரங்கள்:**

21 வயது, 18 வயது முறையே முடிந்த ஆணும், பெண்ணும் பிரிவு 4ன் கீழ் அறிவிப்பு தாக்கல் செய்து சார் பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் பதிவு செய்துகொள்ளலாம்.

ஏற்கனவே திருமணம் செய்து கொண்டவர்களும் இருவருக்கும் 21 வயது முடிந்திருப்பின் பிரிவு 15ன் கீழ் மனு தாக்கல் செய்து திருமணத்தை பதிவு செய்து கொள்ளலாம். தாக்கல் செய்த 30 நாட்களுக்குப் பிறகு வயது/விலக்களிக்கப்பட்ட உறவுமுறை மற்றும் மற்ற நிபந்தனைகள் குறித்து ஒரு தடையும் தெரிவிக்காத நிலையில் 3 மாத காலத்திற்குள் திருமணத்தை மேற்கொள்ளலாம்.

**கட்டணங்கள்**

அறிவிப்பு கோர்வை செய்ய ........ ரூ. 3.00
திருமணப் பதிவுக் கட்டணம் ........ ரூ. 10.00
சான்றிதழ் 1க்கு ........ ரூ. 2.00

**11. கிருத்துவ திருமணங்கள்**

கிருத்துவ திருமண அலுவலரால் பதிவு செய்யப்பட்ட பின்பு நகல் தேவையெனில் மாவட்டப் பதிவாளரால் அசல் பதிவு சான்று சரிபார்க்கப்பட்டு பின்பு பதிவுத்துறை தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு சென்னை பதிவுத்துறை தலைவர் அவர்களால் சான்று வழங்கப்படும்.

**12. தமிழ்நாடு திருமண பதிவு சட்டம், 2009**

இந்திய குடிமக்களில் 21 வயது, 18 வயது முறையே முடிந்த ஆணும், பெண்ணும் தங்களின் மத, குல வழக்கப்படி தமிழ்நாட்டில் நடைபெற்ற திருமணத்தை திருமணம் நடந்த எல்லைக்குள் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவுத்துறை இணையதளத்தில் விவரங்களை பூர்த்தி செய்து உருவாகும் மனுவினை அச்சுப்பிரதி இரட்டையில் எடுத்துக்கொள்ளவேண்டும். பதிவிற்கான நாள் நேரம் முன்பதிவு செய்துகொள்ளலாம். கணவன் மற்றும் மனைவி ஆகியோரின் இருப்பிடச் சான்று, அடையாள அட்டை, இரண்டு சாட்சிகளின் அடையாள அட்டை, வயது குறித்த சான்று, திருமணம் நடை பெற்றதற்கு ஆதாரமான சான்று சமர்ப்பிக்கவேண்டும்.

**கட்டணங்கள்**

திருமணப்பதிவுக் கட்டணம் (90 நாட்களுக்குள்) ........ ரூ. 100.00
திருமணம் நடந்த 91 முதல் 150 நாட்களுக்குள் ........ ரூ. 150.00
திருமணம் நடந்த 151 நாள் முதல் ........ ரூ.1150.00
நகல் வழங்க 1 நகலுக்கு ........ ரூ. 10.00

Verified @ RealEstate™

திருமண அலுவலக எல்லைக்குள் 30 நாட்களுக்கு மேல் வசிப்பவர்கள் அதற்குரிய சான்றுகளுடன் அறிவிப்பினை இணையதளத்தில் பூர்த்தி செய்து இரட்டையில் தாக்கல் செய்ய வேண்டும்.

**13. பிறப்பு இறப்புச் சான்று**

கிராமங்களை பொறுத்து பிறப்பு இறப்பு பதிவேடுகள் வட்டாட்சியரால் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட வருடங்களுக்கு பிறப்பு இறப்புச் சான்று சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறலாம்.

தேடுதல் கட்டணம் ஓராண்டிற்கு ........ ரூ. 100.00

சான்று வழங்க நகல் 1க்கு........ ரூ. 200.00

**14. வில்லங்கச்சான்று பெற கட்டணம்;**

1975 முதல் வில்லங்க சான்று இணையதளத்தில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். 1.1.1975 முதல் இணையவழி கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தால் மின்னணு கையொப்பமிட்ட வில்லங்க சான்றுகள் பயனாளரின் உள்நுழைவுக்கு 3 நாட்களுக்குள் அனுப்பப்படும். 1.1.1975க்கு முற்பட்ட வில்லங்க சான்றுகள் மட்டும் சார்பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

கணினி கட்டணம் 1975க்குப் பிறகான பதிப்புகள் ........ரூ.100.00

மனுக்கட்டணம் ........ ரூ. 1.00

தேடுதல் கட்டணம் முதலாண்டிற்கு........ரூ. 30.00

கூடுதலாக ஒவ்வோராண்டிற்கு........ரூ. 10.00

**15. சான்றிட்ட நகல்:**

சார்பதிவாளர் அலுவலகம் கணினிமயமாக்கப்பட்ட நாளுக்கு பின் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு இணையவழி கட்டணம் செலுத்தி விண்ணப்பித்து மின்னணு கையொப்பமிட்ட சான்றிட்ட நகல்கள் பயனாளரின் உள்நுழைவில் 3 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு முற்பட்ட சான்றிட்ட நகல்கள் மட்டும் சார்பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

கணினி கட்டணம்........ ரூ. 100.00

தேடுதல் கட்டணம்........ரூ. 10 00

ஒரு பக்கத்திற்கு நகல் கட்டணம் ........ரூ. 10.00

**16. நீதிசாரா முத்திரைத்தாள் விற்பனை:**

சார்பதிவாளர் அலுவலகங்களில் நீதிசாரா முத்திரைத் தாள்கள், நீதிமன்ற ஒட்டுவில்லைகள், சிறப்பு ஒட்டுவில்லைகள் ஆகியவை விற்பனைக்குக் கிடைக்கும்.

17. வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் அதிகார ஆவணங்களுக்கு முத்திரைச் சட்டப்பிரிவு 32–ன்படி இந்தியாவில் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்வு சான்று (Adjudication) பெற்றுக் கொள்ளலாம்.

**18. ஆவண எழுத்தர் கட்டண விவரம்:**

விற்பனை, பரிமாற்றம், நன்கொடை, ஏற்பாடு ஆவணங்கள்

ஆவண மதிப்பு ரூ.10,000 வரை கட்டணம் ........ரூ.50.00

ரூ.10,000க்கு மேல் 50,000 வரை ........ரூ.100.00

ரூ.50,000க்கு மேல் 1 இலட்சம் வரை ........ரூ.150.00

ரூ. 1 இலட்சத்திற்கு மேல் 2 இலட்சம் வரை ........ ரூ.200.00

ரூ. 2 இலட்சத்திற்கு மேல் 5 இலட்சம் வரை ........ ரூ.300.00

ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ........ ரூ.400.00

ஆவண வைப்பு, குத்தகை, ஈடு, கூட்டுவணிகம்,

விடுதலை, அறக்கட்டளை ஆவணங்களுக்கு........ரூ.100.00

ஒப்புதல், இரசீது, ரத்து, அதிகாரம், மணமுறிவு,

உடன்படிக்கை, கடன் உறுதி தீர்ப்பு ஆவணங்களுக்கு ........ ரூ50.00

பாக ஆவணங்கள் 2 அட்டவணை வரை ........ ரூ.200.00

மேற்கொண்டு ஒவ்வொரு அட்டவணைக்கும் ........ரூ.100.00

உயர்ந்த அளவாக ........ரூ.500.00

கட்டட ஆவணங்களுக்கு 1ஏ படிவம் தயாரிக்க ........ரூ.100.00

செலுத்தும் தொகைக்கு உரிய இரசீது வழங்கப்பட வேண்டும்.

Verified @ RealEstate™